பக்கங்கள்:-21

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | கார்த்திகை 30 | ஞாயிற்றுக்கிழமை | 17.12.2023 | அதிர்வு 138

## பலத்த மழை காரணமாக 7 ஆயிரம் பேர் அந்தரிப்பு

நாட்டில் பலத்த மழை மற்றும் வெள்ளத்தால் 2 ஆயிரத்து 271 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 61 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, 06▶




வெள்ளத்தில் மூழ்கிய வீடுகள்



# தத்தளித்த மக்கள் பாதுகாப்பாக மீட்பு

+ முல்லைத்தீவு மாவட்டத்தில் 2,687 பேர் பாதிப்பு
+ 243 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பு

(சண்முகம் தவசீலன், ந.லோகதயாளன்)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வருகின்ற கன மழை காரணமாக மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களும் முற்று முழுதாக நிறைந்து வான் பாய்கின்ற நிலையில் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மழை தொடர்ந்து பெய்தால் மிகப் பெரிய அழிவுகளை எதிர்நோக்குகின்ற நிலைமைக்கு முல்லைத்தீவு மாவட்ட மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.**

06▶

# இரணைமடுக் குளத்தின் வான்கதவுகள் திறப்பு

## ஐயன்கோவில் கிராம மக்கள் இடம்பெயர்வு

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி – இரணைமடுக் குளத்தின் வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளமையால் தாழ்நிலப் பகுதியிலுள்ள ஐயன்கோவில் கிராம மக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

அந்தக் கிராமத்தைச் சேர்ந்த 23 குடும்பங்கள் வெள்ளம் காரணமாக நேற்று இடம்பெயர்ந்துள்ளன.

ஐயன்கோவில் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த 70 பேர் அருகிலுள்ள பாடசாலையொன்றில் 06▶



# வடக்கிலேயே அதிக பாதிப்பு



(ந.லோகதயாளன்)

சீரற்ற காலநிலையால் வடக்கு மாகாணத்திலேயே அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வடக்கு 06▶




அது, கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் கொடி கட்டிப் பறக்கும் வர்த்தகக் குடும்பம். அண்ணன் – தம்பி இருவரும்வர்த்தகர்கள். வர்த்தகத்துக்காக அரசியலிலும் ஈடுபடுபவர்கள்.

அண்ணனின் மகன் வடக்கில் அரசியல் புள்ளி.

அரசியலும் வர்த்தகமும் அண்ணன் – தம்பி உறவைக் குடும்பங்களாக பிளவுபட வைத்துவிட்டன.

தம்பியின் மகன் மூன்று 06▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# வெள்ளத்தில் மிதக்கும் ஒட்டுசுட்டான் பிரதேசம் அங்கு சிக்கிய மக்கள் நேற்று பாதுகாப்பாக மீட்பு

(படங்கள்:- சண்முகம் தவசீலன்)

















# வெள்ளத்தில் மிதக்கும் ஒட்டுசுட்டான் பிரதேசம் அங்கு சிக்கிய மக்கள் நேற்று பாதுகாப்பாக மீட்பு

(படங்கள்:-ந.லோகதயாளன்)













# கந்தளாய்க் குளத்தின் வான் கதவுகள் திறப்பு




(எஸ்.கீதபொன்கலன், ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாய் குளத்தின் ஆறு வான் கதவுகள் ஒரு அடிக்கு நேற்றுக் காலை திறக்கப்பட்டது. இதனால் அப்பகுதியை அண்டிய மக்களை அவதானமாகச் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற அடை மழை காரணமாக கந்தளாய் குளத்தின் நீர் மட்டம் வெகுவாக அதிகரித்தமையினால் இவ்வாறு மேலதிக நீரை வெளியேற்றுவதற்காக வான் கதவுகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இதனால் குளத்திலிருந்து விநாடிக்கு 800 கன அடி அளவான நீர் வெளியேறி வருவதாகவும் கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இவ்வாறு வான் கதவுகள் திறந்துள்ளமையால் செய்கை பண்ணப்பட்டுள்ள வேளாண்மை அழிவடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பிரதேச விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வெளியேற்றப்படும் நீரின் தாக்கம் கந்தளாய், தம்பலகாமம் ல், கிண்ணியா உட்பட பல வயல் நிலங்கள் மற்றும் நீரேந்து பகுதிகளைப் பாதிக்கக் கூடும். இதனால் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். தொடர்ச்சியான அடை மழை காரணமாக தாழ் நிலப் பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

## டெங்கு நோய் அறிகுறி ஏற்பட்டால் உடன் குருதிப் பரிசோதனை செய்க

### வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் அறிவுறுத்து

(எஸ்.நிதர்ஷன்)

யாரேனும் ஒருவருக்குக் காய்ச்சல் ஏற்பட்டு டெங்கு நோய் அறிகுறி ஏற்பட்டால் அருகில் உள்ள அரச வைத்தியசாலைகளில் குருதிப் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருமான வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் அதிகரித்துள்ள நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தினசரி நூற்றுக்கணக்கானோர் டெங்கு நோய்க்கான சிகிச்சையைப் பெற்று வருகின்றனர். இன்றும் நூற்றுக்கணக்கானோர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதனா வைத்தியசாலைக்கு அப்பால் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலை மற்றும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலும் டெங்கு நோயாளிகளைப் பராமரிக்க விடுதிகள் காணப்படுகின்றன.

அதேவேளை, அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை, கோப்பாய் பிரதேச வைத்தியசாலை மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச வைத்தியசாலையிலும் டெங்கு நோய் அறிகுறி தொடர்பான இரத்தப் பரிசோதனையை மேற்கொள்ளலாம்." - என்றார்.

## சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று கஜமுகா சூரசம்ஹாரம்

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை கஜமுகா சூரசம்ஹாரம் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 3 மணியளவில் ஆரம்பமாகும் கும்பபூசையைத் தொடர்ந்து மூலஸ்தான பூசை, பிள்ளையார் கதை படிப்பு என்பன இடம்பெற்று மாலை 5 மணியளவில் கஜமுகா சூரசம்ஹாரம் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகம், பஞ்சமுக அர்ச்சனை, ஹோமம் என்பன நடைபெறும்.

இதேவேளை நாளை திங்கட்கிழமை பிள்ளையார் பெருங்கதை பூர்த்தி உற்சவம் இடம்பெறவுள்ளது.

பஞ்சமுக அர்ச்சனை, மஹாகணதிஹோமம், 108 கலச அபிசேகம், என்பவற்றைத் தொடர்ந்து வசந்த மண்டபபூசை இடம்பெற்று விநாயகப் பெருமான் வீதியுலா வருவார். அதனைத் தொடர்ந்து பிள்ளையார் கதைப்படிப்பு இடம்பெற்று உற்சவம் பூர்த்தியாகும்.



# சீன ஆய்வுக் கப்பலை அனுமதிக்க வேண்டாம்; இலங்கை, மாலைதீவிடம் இந்தியா கோரிக்கை



இலங்கைக் கடற்பிராந்தியத்தில் ஆய்வுகளை மேற்கொள்ள வரும் சீன கப்பலுக்கு அனுமதி வழங்க வேண்டாம் என இந்தியா இலங்கையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சீன ஆய்வுக் கப்பலான (Xiang Yang Hong 03) ஷியாங் யாங் ஹோங் 03 கப்பல் எதிர்வரும் ஜனவரி மாதம் 5ஆம் திகதி முதல் மே மாதம் இறுதி வரை தென்னிந்திய கடற்பரப்பில் ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க எதிர்ப் பார்த்துள்ளது.

இலங்கை மற்றும் மாலைதீவுகளின் கடற்பரப்புகளும் அதில் அடங்குகின்றன.

இலங்கையிடமும் மாலைதீவுகளிடமும் தமது கப்பலின் ஆய்வு நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குமாறு சீனா கோரிக்கை விடுத்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும், இதற்கு இந்தியா தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளதாக ஹிந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ஆய்வுக் கப்பலுக்கு அனுமதி வழங்க வேண்டாம் என இந்தியா இலங்கையிடமும் மாலைதீவுகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

ஷியாங் யாங் ஹோங் 03 கப்பல் தற்போது தென் சீனக் கடலில் Xiamen கரைக்குஅப்பால்நங்கூரமிடப்பட்டுள்ளதுடன், அனுமதி கிடைத்த பின்னர் மலாக்கா ஊடாக பயணிக்கவுள்ளதாக ஹிந்துஸ்தான் ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆய்வு நடவடிக்கை எனும் போர்வையில் சீனா இந்தியாவை உளவு பார்ப்பதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மாலைதீவில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மொஹமட் முய்ஸ் இந்திய இராணுவத்தினரை தமது நாட்டிலிருந்து வெளியேறுமாறு அறிவித்துள்ள பின்புலத்தில் இந்த சர்ச்சை உருவாகியுள்ளது.

# வரி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருக்காத வாகனங்களின் பதிவுகளை நீக்க நடவடிக்கை

வரி அனுமதிப்பத்திரத்தை கொண்டிராத வாகனங்கள் தொடர்பான தகவல்களைத் திரட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

05 வருடங்களுக்கு அதிகக் காலம் வரி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளாத வாகனங்கள் தொடர்பில் அனைத்து மாகாண சபைகளிடமிருந்தும் தகவல்கள் கோரப்பட்டுள்ளன என மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அந்தத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வாகன உரிமையாளர்களுக்கு அது தொடர்பில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.




வரி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாத வாகனங்களின் பதிவுகளை தமது திணைக்களத்தின் தரவுக் கட்டமைப்பிலிருந்து நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தினங்களுக்கு முன்னர் தலைநகரில் பெருந்தொகை போதைப்பொருளுடன் சிக்கி இப்போது விளக்கமறியலில். 18 ஆம் திகதி வரை முதல் கட்ட விளக்க மறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிக்கிய போதைப் பொருளின் பெறுமதி கோடிக்கணக்கு என்றால், சிக்கிய ரகத்தில் ஒரு சிக்கல் இருக்கின்றது – வழக்குத் தொடுக்க என்கின்றன சில வட்டாரங்கள். 'குஷ்' என்ற ரகப் போதைப்பொருளே இப்போது சிக்கியுள்ளது. அண்மைக் காலமாகத்தான் இது நாட்டுக்குள் பிடிபடத் தொடங்கியுள்ளது. இந்த ரகப் பொருளை போதைப் பொருளாக பட்டியலிட்டு நமது நாட்டில் இன்னும் சட்டம் நடைமுறைக்கு வரவில்லை.

அண்மைக்காலமாக அதிகமாக பிடிபடும் – மிக வலிமையான – மிகப் பெறுமதியான – 'ஐஸ்' ரகப் போதைப் பொருள் கூட அண்மையில்தான் இலங்கையில் தடை செய்யப்பட்ட போதைப் பொருளாகப் பட்டியலிடப்பட்டது.

'குஷ்' ரகப் போதைப்பொருள் இன்னும் பட்டியலிடப்படவில்லை. இந்தச் சட்ட ஓட்டை மற்றும் அரசியல் – வர்த்தகக் குடும்பத்தின் செல்வாக்கு ஆகியவை மூலம் சம்பந்தப்பட்ட இளைஞர் விரைவில் வெளியே வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

பிடிபட்டு மூன்று நாள்களாகியும் – விளக்க மறியலுக்குப் போய் இரண்டு நாள்கள் கடந்தும் – இந்த விவகாரம் ஊடகங்களில் வெளிவரவில்லை என்பதால் இது எவ்வளவு தூரம் High Profile Case என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள முடியும்.

இது குறித்து நான் எழுதுவது வீண் சிக்கல்களை விலைக்கு வாங்கும் வேலை என்கிறார் என் ஆசிரியர் பீட சக ஊழியர் ஒருவர்.

\+ + +

நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுஜனப் பெரமுனவின் இரண்டாவது தேசிய மாநாட்டை அடுத்து கட்சியின் புதிய நிறைவேற்றுக் குழு நேற்றுக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் கூடிக் கட்சியின் புதிய நிர்வாகிகளை முடிவு செய்தது.

இதுவரை காலமும் கட்சியின் தேசிய அமைப்பாளராக இருந்தவர் பஸில் ராஜபக்ஷ. இப்போது அந்தப் பதவியில் அவர் இல்லை. தற்போதைக்கு அந்தப் பதவி பெற்றிடமாக விடப்பட்டுள்ளது.

"பஸில் ராஜபக்ஷ ஒரு நிறுவுநராகக் கட்சி அமைப்புப் பணிகளைச் செய்கிறார். அதனால் தேசிய அமைப்பாளர் பதவியை வெற்றிடமாக விடுவது என அவரும் கட்சியினரும் உடன்பாட்டுக்கு வந்துள்ளனர்.

"எதிர்காலத்தில் நாம் எடுக்கும் அரசியல் தீர்மானங்களின் அடிப்படையில் அதற்குத் தேவையான ஒருவரை நியமிப்போம்" என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

முன்னைய செயலாளர் சாகர காரியவசம் தொடர்ந்தும் கட்சியின் செயலாளராக நியமனம் பெற்றுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் பவித்ரா வன்னியாராய்ச்சி கட்சியின் பொருளாளராக நியமிக்கப்பட்டுள்ளார். தர்மரத்தின தேரர் மீண்டும் கட்சியின் தவிசாளராக நியமனம் பெறுகின்றார்.

கட்சியின் அரசியல் குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. அரசியல் குழு விரைவில் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளர் பதவிகளை உருவாக்கி, அப்பதவிகளுக்கு ஒரு தமிழரையும் ஒரு முஸ்லிமையும் நியமிக்கும் என்றும் கூறப்பட்டது.

## தத்தளித்த மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று மதிய வேளையில் திடீரென வந்த வெள்ளம் காரணமாக ஒட்டுசுட்டான்பிரதேசத்தின் புளியங்குளம், பண்டாரவன்னி உள்ளிட்ட கிராம மக்களின் வீடுகள் பல வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் பலர் வெள்ளத்தில் சிக்கினர். இவர்களை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக அதிகாரிகள், கிராம அலுவலர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம இளைஞர்கள் ஆகியோர் இராணுவத்தினருடன் இணைந்து பாதுகாப்பாக மீட்டனர். அவர்கள் தற்போது பாதுகாப்பான இடங்களில் தங்கவைக் கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று குளங்களுக்கான நீர் வரத்து மிக வேகமாகக் காணப்படுகின்ற நிலைமையில் பல்வேறு குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயத்தையும் எதிர்கொண்டுள்ளதோடு வான் பாய்கின்ற நீர், மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளமையால் மக்கள் மிக அவதானமாகச் செயற்படுமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்று மாலை 4 மணி வரையான தகவலின் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிலே அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்டறுத்தகுளம், நட்டாங்கண்டல், பாண்டியன் குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டிகுளம், சிவபுரம், மூன்றுமுறிப்பு, பூவரசங்குளம், விநாயகபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 283 குடும்பங்களைச் சேர்ந்த 942 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் மாங்குளம், பனிக்கன்குளம், பண்டாரவன்னி, இந்துபுரம், தட்டையர்மலை, புளியங்குளம், தச்சடம்பன், கூழாமுறிப்பு, கனகரத்தினபுரம், காதலியர்சமனங்குளம், தண்டுவான், ஒட்டுசுட்டான் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 166 குடும்பங்களைச் சேர்ந்த 556 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு, சிலாவத்தை, செல்வபுரம், வற்றாப்பளை, தண்ணிமுறிப்பு, முள்ளியவளை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 44 குடும்பங்களைச் சேர்ந்த 136 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் அனிஞ்சியன்குளம், உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம், ஆலங்குளம், தேராங்கண்டல், கல்விளான், மல்லாவி, யோகபுரம் கிழக்கு, புகழேந்திநகர், பாரதிநகர், யோகபுரம் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 104 குடும்பங்களைச் சேர்ந்த 323 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர்கள் பிரிவில் புதுக்குடியிருப்பு மேற்கு, தேவிபுரம், மாணிக்கபுரம், உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு தெற்கு மற்றும் வள்ளிபுனம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 283 குடும்பங்களைச் சேர்ந்த 730 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மொத்தமாக 880 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 687 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேரும், புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேரும், பண்டாரவன்னி கிராம அலுவலர் பிரிவில் 63 குடும்பங்களைச் சேர்ந்த 201 பேருமாக 73 குடும்பங்களைச் சேர்ந்த 243 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்தத் தகவலில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதேவேளை, பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்குப் பல தரப்பினரும் சமைத்த உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளை ஏற்பாடு செய்து வழங்கி வருகின்றனர்.

## வடக்கிலேயே அதிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாகாணத்தில் ஆயிரத்து 371 குடும்பங்களைச் சேர்ந்த 4ஆயிரத்து 247 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கிழக்கு மாகாணத்தில் 892 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 780 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பலத்த மழை காரணமா...

(முதலாம் பக்கத் தொடர்சி...)

மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், 33 வீடுகள் அனர்த்தத்தில் சேதமடைந்துள்ளன என்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

212 குடும்பங்களைச் சேர்ந்த 700 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக் கப்பட்டுள்ளனர் என்றும் அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட பல பகுதிகளில் தொடர்ச்சியாகக் கடும் மழை பெய்து வருகின்றது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பல பகுதிகளில் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இலங்கையை அண்மித்த வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை காரணமாக வடக்கு, கிழக்கு, வட மத்திய, ஊவா ஆகிய மாகாணங்களிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் மழை தொடரும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் காற்றின் வேகம் அதிகரிக்கலாம் என்பதால் விழிப்புடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

## இரணைமடுக் குள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சமைத்த உணவை கண்டாவளை பிரதேச செயலகம் வழங்கி வருகின்றது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தமிழினத்தின் துரதிஷ்டம்

யதார்த்தத்தைப் புரியாமல், விட்டத்தைப் பார்த்து விட்டேத்தியாகக் கனவு கண்டு கொண்டிருக்கிறோம். அந்தக் கனவில் கற்பனைக் கதை பேசிக் கொண்டிருக்கிறோம்.

கானல் நீரில் தாகம் தீர்க்கும் சாத்தியம் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

சர்வதேசமும் இந்தியாவும் எங்களுக்காகக் குரல் எழுப்பி, எங்களுக்கு நீதி, நியாயத்தை தேடி தரப் போகின்றன என்ற கற்பனையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இந்தியாவும் சரி, சர்வதேசமும் சரி, அவை யவற்றின் பூகோள அரசியல் போக்குகளின் பாதைகளில் எங்களின் நலன்களையும் நோக்கும் விடயங்கள் ஒன்றித்து அமைந்தால் மட்டுமே அவை எமது நலன் குறித்தும் கவனிக்கும் என்ற உண்மை புரியாமல் ஏதேதோ கோரிக்கைகளையும், தீர்மானங்களையும், அபிலாசைகளையும் முன்னிறுத்தி வெறும் அறிக்கைப் போர் நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

தலைவர்பிரபாகரன்விடுதலைப்போராட்டத்தை நடத்திய காலகட்டமும் களச் சூழமைவும் வேறானவை. இன்றைய நிலைமை முற்றிலும் வேறுபட்டது.

தனது இலக்கை நோக்கி நகர்வதற்கும், விடயங்களை நகர்த்துவதற்கும். தலைவர் பிரபாகரனிடம் சக்தி, வலிமை, ஆளுமை பலமாக இருந்தது. முப்படை வலிமையோடு, இராணுவ வலுச்சமனிலையோடு, தலைவர் பிரபாகரன் அரசியல் நடத்திய காலம் வேறு. இன்றைய நிலைமை வேறு.

வரலாறு புரியாதவர்கள் வரலாறுகளைப் படைப்பது இயலாத காரியம்.

முதலில் வரலாற்றை - யதார்த்தப் புற உண்மைகளை - புரிந்து கொள்ள வேண்டும்.

காலம் ஓடிக் கொண்டிருக்கின்றது. நிலைமைகள் தலைகீழாகிக் கொண்டிருக்கின்றன.

கொள்கைப் பிடிப்பு, கோட்பாட்டுச் சிந்தனை, இலக்கு நோக்கிய பற்றுறுதி என்ற நினைப்பில் அடிப்படைகளையே நாம் கோட்டை விட்டுக் கொண்டிருக்கின்றோம்.

நாம் கேட்ட சமஷ்டி மக்களையும், மொழியையும், நமது பண்பாட்டுக் கோலங்களையும், தாயக மண்ணையும், இனத்தையும் பேணிக் காப்பதை அடிப்படையாகக் கொண்டது.

ஆனால் இங்கு பௌத்த - சிங்கள பேரினவாதத் திமிர் பேயுருக் கொண்டு, தமிழர் தேசத்தின் இந்த அடிப்படைக் கட்டுமானங்களை ஒவ்வொன்றாக இலக்கு வைத்து ஊடுருவி தகர்த்தழித்துக் கொண்டிருக்கின்றது. அதன் வீரியத்திற்கும், ஆட்சி அதிகார வலிமையினால் கிட்டிய மேலாண்மைக்கும் முகம் கொடுக்க முடியாது தமிழர் தேசம் சுருங்கி கொண்டிருக்கின்றது. பேரினவாதம் நமது தேசத்தை - தேசியத்தை - கபளீகரம் செய்து அரித்து கொட்டிக் கொண்டிருக்கின்றது.

சிங்கள - பௌத்த மத வீரியத்துக்கு, காணி அபகரிப்புக்கு, குடியேற்றப் பரம்பலுக்கு, மத ஆக்கிரமிப்புக்கு காப்பு கட்டாமல் - முற்றுப்புள்ளி வைக்காமல் - காலத்தை இழுபட விடுவது தமிழினத்தைப் பொறுத்தவரை முதலுக்கே ஆபத்து.

இவற்றையெல்லாம் இழந்து விட்டு, பொதுசன வாக்கெடுப்பு என்று விடாப்பிடியாக நிற்பதோ, ஒன்றுபட்ட தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வுக்கு மட்டுமே இணங்குவோம் என்று பிடிவாதம் பிடிப்பதோ, உச்ச அதிகாரப் பகிர்வுடன் மாகாண சபை முறைமை அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே ஏற்போம் என்று கொள்கை உறுதியைப் பறைசாற்றுவதோ என்ன பயனைத் தரப் போகின்றன? உள்ளதையும் இழந்து விட்டு, இவற்றுக்காக இலக்கு தவறாமல் பற்றுறுதியுடன் நிற்கிறோம் என்பது இல்லாத ஊருக்கு வழி தேடும் விவகாரமாக போய்விடும்.

நமது இறுதி இலக்குக்கும் யதார்த்தக் களப்புறச் சூழ்நிலைக்கும் இடையில் ஒரு 'பலன்ஸிங்' செய்து கொண்டு நகர்வதுதான் சாணக்கியமாக இருக்க முடியும்.

அந்த சாணக்கியப் பாதையை வகுத்துக் கொள்வதற்கு எமது இயலுமை, இயலாமை பற்றிய சரியான - தெளிவான - சுய கணிப்பீடு நம்மிடம் இருக்க வேண்டும்.

அப்படி இல்லாமல் வாய்ச் சவடால் அரசியலையும், அறிக்கைப் போர் அரசியலையும்தான் நாம் செய்து கொண்டிருக்கின்றோம். அதுதான் நம் இனத்தின் துரதிஷ்டம்.

# இந்தியாவில் ஒரே நாளில் 339 பேருக்கு கொவிட் தொற்று

இந்தியாவில் கொரோனா தொற்று மீண்டும் பரவலடைந்து வருகிறது.

இந்திய மத்திய சுகாதார அமைச்சினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள தரவுகளின் படி, ஒரே நாளில் புதிதாக 339 பேருக்கு கொவிட் 19 தொற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை 8 மணி நிலவரப்படி, கொரோனாவால் பலியானோர் எண்ணிக்கை 5 லட்சத்து 33 ஆயிரத்து 311 ஆக பதிவாகியுள்ளது.

இந்தியாவில் இதுவரை கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4,50,04,481 ஆக உயர்ந்துள்ளது. 4,44,69,678 பேர் கொரோனா தொற்றில் இருந்து மீண்டுள்ளனர்.

இதன்படி, மீட்பு விகிதம் 98.81 விதமாகவும் இறப்பு விகிதம் 1.19 விதமாகவும் பதிவாகியுள்ளது.

இந்தியாவில் இதுவரை 220.67 கோடி கொரோனா தடுப்பூசி டோஸ்கள் போடப்பட்டுள்ளன.



# நம்பியவர்களே விஜயகாந்த் முதுகில் குத்தியதால் தே.மு.தி.கவுக்கு பெரிய சறுக்கலை ஏற்படுத்தியது!

## - பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவிப்பு

“விஜயகாந்த் எதிர்க்கட்சித் தலைவர் ஆன மூன்று மாதங்களில் யாரையெல்லாம் நம்பி எம்.எல்.ஏ. பதவி கொடுத்தாரோ, அவர்கள் அனைவரும் அவரின் முதுகில் குத்திவிட்டனர். அவர்கள் செய்த துரோகங்களும், அதற்குப் பிறகு நடந்த ஒவ்வொரு விஷயமும் ஒரு பெரிய சறுக்கலை தலைவருக்கும் தே.மு.தி.கவுக்கும் ஏற்படுத்தியது”

– இவ்வாறு தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த பிரேமலதா,

“விஜயகாந்த் மற்றும் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக செயலாளர்கள் என அனைவரும் பக்கபலமாக இருக்கின்றனர். அவர் நடிகராக இருந்தவரை வெறும் சினிமா துறையில் மட்டுமே நாங்கள் கவனம் செலுத்தினோம். அப்போது விஜயகாந்த் எல்லாருக்கும் பொதுவானவராகவும், எல்லோராலும் விரும்பப்பட்டவராகவும் இருந்தார். எப்போது விஜயகாந்த் கட்சிக்கு வந்தாரோ, அத்தனை பேரும் அவருக்கு எதிராளியாக மாறுகின்ற ஒரு சூழல் வந்தது.

விஜயகாந்த் அத்தனை எதிர்ப்புகளையும், சவால்களையும் சந்தித்து எதிர்நீச்சல் போட்டே திரையுலகிலும், அரசியலிலும் முன்னேறினார்.



அதற்கான வெற்றியை மக்களும் கொடுத் தனர். விஜயகாந்த் உத்தரவுப்படியே தே.மு.தி.கவின் செயல்பாடுகள் எப்போதும் இருக்கும். அரசியல் என்பதே சவால் தான். அரசியலில் பெண்கள் இருப்பது பெரிய சவால் என்பதற்கு உதாரணம் ஜெயலலிதாதான். ஜெயலலிதா சந்திக்காத சவால்களே இல்லை. அதில் அவர் வெற்றியும் பெற்றுள்ளார்.

விஜயகாந்துக்கு எப்போதும் எம்.ஜி.ஆர்தான் குரு, ரோல் மாடல். ஒரு பெண் தலைவராக ஜெயலலிதாதான் எனக்கு ரோல் மாடல். அவருடைய கம்பீரம், தைரியம், முடிவெடுக்கும் திறன் எனக்கு மிகவும் பிடிக்கும். அதைப் பார்த்தும் இருக்கிறேன்.

தமிழகத்தில் உள்ள அனைத்துப் பெண்களுக்கும் உறுதுணையாக இருப்பேன். தற்போது பொதுச் செயலாளர் என்ற மிகப் பெரிய பொறுப்பை எனக்கு கொடுத்திருக்கின்றனர். தொண்டர்களுக்கு அண்ணியாக மட்டுமில்லை, அன்னையாகவும் பயணித்துக் கொண்டிருக்கிறேன்.

2011 வரை தே.மு.தி.க. யாருடனும் கூட்டணி வைக்காமல் தனித்து இயங்கி வந்தது. விஜயகாந்த் எதிர்க்கட்சித் தலைவர் ஆன மூன்று மாதங்களில் அவர் யாரையெல்லாம் நம்பி எம்.எல்.ஏ. பதவி கொடுத்தாரோ, அவர்கள் அனைவரும் அவரது முதுகில் குத்திவிட்டனர். அவர்கள் செய்த துரோகங்களும், அதற்குப் பிறகு நடந்த ஒவ்வொரு விஷயமும் ஒரு பெரிய சறுக்கலை தலைவருக்கும் தே.மு.தி.கவுக்கும் ஏற்படுத்தியது. அதன்பிறகு அவரின் உடல்நிலையும் பாதிக்கப்பட்டது. ஆனால், விஜயகாந்த் யாருடனும் கூட்டணி வைக்க வேண்டாம் என உறுதியாக இருந்தார்” என்று தெரிவித்தார்.

# நாடாளுமன்றத்தில் அத்துமீறல்: 6 ஆவது சந்தேகநபர் கைது

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அத்துமீறல் வழக்கில் இதுவரை 5 பேர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், 6 ஆவது நபராக மகேஷ் குமாவத் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற மக்களவையின் பார்வையாளர் மாடத்தில் இருந்து கீழே குதித்து புகையை கக்கும் குப்பிகளை வீசி அத்துமீறலில் ஈடுபட்ட உத்தரப் பிரதேசத்தின் லக்னோவைச் சேர்ந்த சாகர் சர்மா, பெங்களூரு விவேகானந்தா பல்கலைக்கழகத்தில் பயின்ற மைசூருவைச் சேர்ந்த பொறியியல் பட்டதாரி மனோரஞ்சன் ஆகியோர் உடனடியாக கைது செய்யப்பட்டனர். மேலும், இவர்களுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்துக்கு வெளியே கோஷமிட்ட ஹரியாணாவைச் சேர்ந்த நீலம் தேவி, அமோல் ஷிண்டே ஆகியோரும் அன்றைய தினமே டில்லி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில், இந்த வழக்கில் தேடப்பட்டு வந்த மகேஷ் குமாவத் டில்லி பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.



# குவைத் அரச தலைவர் காலமானார்!

குவைத்தின் அரச தலைவர் ஷேக் நவாஸ் அல்-அஹமட் அல்-ஜாபர் அல்-சபா தமது 86 ஆவது வயதில் நேற்று காலமானார்.

குவைத்தின் அரச தொலைக்காட்சி மூலம் அமைச்சர் ஷேக் மொஹமட் அப்துல்லா அல்-சபா இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

மரணத்திற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

எனினும், 40 நாட்கள் உத்தியோகபூர்வ துக்க காலத்தை அனுஷ்டிக்குமாறும் அரச துறைகளை மூன்று தினங்களுக்கு மூடுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குவைத்தின் பட்டத்து இளவரசர் ஷேக் மெஷால் அல்-அஹ்மட் அல்-ஜாபர் அல்-சபா (வயது 83) புதிய அரச தலைவராக பெயரிடப்பட்டுள்ளதாக அல்ஜஸீரா செய்தி வெளியிட்டுள்ளது.

தனது ஒன்றுவிட்ட சகோதரர் ஷேக் சபா அல்-அஹ்மத் அல்-ஜாபர் அல்-சபாவின் மரணத்திற்கு பிறகு 2020 ஆம் ஆண்டு செப்டம்பரில் அரச தலைவராக பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் வரலாறு காணாத உறைபனி: சூழலியல் ஆர்வலர்கள் கடும் எச்சரிக்கை!





சீனாவில் வரலாறு காணாத அளவு பனிப் பொழிவதால் அங்கு மக்களின் இயல்பு நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று சீன அரசு பனிப் பொழிவு மேலும் அதிகரிக்கலாம் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது. ஜனாதிபதி ஜிஜின் பிங் மக்கள் பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

பீஜிங்கில் நடப்பாண்டில் பனிப் பொழிவு காலம் தொடங்கியவுடனே புதிய உச்சத்தில் குளிர்நிலை பதிவாகியுள்ளதால் பொதுப் போக்குவரத்தில் கடுமையான தாமதங்கள் நிகழ்கின்றன.

ஓடுதளங்கள் வழுக்கும் சூழலில் இருப்பதால் விமானங்கள் பல ரத்து செய்யப்பட்டுள்ளன. கடந்த 14 ஆம் திகதி சீனாவில் பனியால் மெட்ரோ ரயில் மோதி விபத்துக்குள்ளானதில் நூற்றுக்கணக்கான பயணிகள் காயமடைந்தனர்.

இந்த நிலையில், பீஜிங் வானிலை ஆய்வு மையம் நேற்று காலை வெளியிட்ட அறிவிப்பில், டிசம்பர் 19 ஆம் திகதி வரை நாட்டில் பரவலாக பல பகுதிகளில் குளிர் அலை வீசும் என்று தெரிவித்துள்ளது.

வடக்கு சீனா, மஞ்சள் ஆறு, ஹுவேஹே ஆற்றுப் பகுதிகளில் வரலாறு காணாத அளவுக்கு உறை பனி ஏற்படலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்தனை குளிருக்கு இடையேயும் சுற்றுலா பயணிகள் சீனப் பெருஞ்சுவரை சுற்றிப் பார்ப்பதில் ஆர்வம் காட்டினர்.

இனி வரும் நாட்களில் சீனாவில் பரவலாக பல பகுதிகளிலும் பூஜ்ஜிய டிகிரி அல்லது அதற்கும் குறைவாகவே வெப்பநிலை பதிவாகும் என்று வானிலை ஆய்வு மையம் கூறுகின்றது.

வியட்நாமை அண்மித்த குய்சு மாகாணத்திலும் கடும் குளிர், உறைபனி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நிலக்கரி, எரிசக்தி, எண்ணெய், எரிவாயு விநியோக நிலையங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்துவதோடு, அவற்றில் இருந்து மக்களுக்கு தடையில்லா விநியோகம் நடப்பதையும் உறுதி செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி ஜி ஜின்பிங் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த கோடை காலத்தில் சீனா மிக மோசமான வெப்பத்தை உணர்ந்தது, பின்னர் வடக்கு சீனாவை கடுமையான மழை வெள்ளம் புரட்டிப் போட்டது. தற்போது வரலாறு காணாத பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற கடுமையான காலநிலைகள் புவிவெப்பமயமாதலால் ஏற்படுவதாக அந்நாட்டின் சூழலியல் ஆர்வலர்கள் எச்சரிக்கின்றனர்.




# போதைப் பொருள் வியாபாரிகள் பற்றித் தகவல் வழங்க மட்டக்களப்பில் புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகம்

## துப்புத் தருபவரின் இலக்கம் பொலிஸுக்குத் தெரிய வராதாம்

(கனகராசா சரவணன்)



மட்டக்களப்பில் போதைப்பொருள் வியாபாரிகள் தொடர்பாக தகவல் வழங்குவதற்கு புதிய தொலைபேசி இலக்கத்தைப் பொலிஸ் வெளியிட்டுள்ளது.

வழங்குபவரின் தொலைபேசி இலக்கம் பொலிஸாரின் தொலைபேசிக்குக் காட்டாத 0718598840 என்ற புதிய தொலைபேசி இலக்கத்தின் ஊடாக போதைப்பொருள் வியாபாரிகளது தகவலை வழங்குமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் ஏ.எதிரிமான பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்று சனிக்கிழமை புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகம் செய்துவைத்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பதில் பொலிஸ் மா அதிபரின் போதைப்பொருள் ஒழிப்புக்கான விசேட திட்டத்தின் கீழ் பொதுமக்களிடமிருந்து போதைப்பொருள் வியாபாரிகளது தகவலை பெறுவதற்கான புதிய பொறிமுறையாக, தகவல் வழங்குபவரின் தொலைபேசி இலக்கத்தைப் பொலிஸாருக்கு காட்டாத இந்தப் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய பொறிமுறைக்கமைய மாவட்டத்தில் போதை பொருளை ஒழிப்பது தொடர்பாக மாவட்டதிலுள்ள 14 பொலிஸ் நிலைய பிரதேசங்களிலும் இந்தப் புதிய தொலைபேசி இலக்கம் பொதுமக்கள் பார்வைக்குக் காட்சிபடுத்தப்படும்.

எனவே பொதுமக்கள் பயமின்றி போதை பொருள் வியாபாரிகள் தொடர்பான தகவல்களை அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 0718598840 என்ற இலக்கத்தின் ஊடாக அறியப்படுத்தி இந்த மாவட்டத்தில் மட்டுமல்ல, இந்த நாட்டிலுள்ள எதிர்கால சந்ததிகளை இந்தப் போதை பொருள் பாவனையில் இருந்து மீட்பதற்காக போதைப்பொருள் வியாபாரிகள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு பொதுமக்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# நாட்டில் பரவலாகப் பெருமழை: சாரதிகளுக்கு அவசர அறிவிப்பு!

நாட்டில் பரவலாக கனமழை பெய்து வருகிறது. இந்த நிலையில் அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் சாரதிகளுக்கான அவசர அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக, அதிவேக நெடுஞ்சாலையில் செல்லும் வாகன சாரதிகள் 50 மீற்றர் தூரம் அளவுக்கு இடைவெளியில் பயணிக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபை சாரதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதிவேக நெடுஞ்சாலைகளில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் எச்சரிக்கை இலத்திரனியல் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதிகள் இருண்டு காணப்படுவதால், வாகனங்களின் முன்பக்க விளக்குகளை எரியவிட்டு வாகனங்களை இயக்குமாறு, நெடுஞ்சாலை போக்குவரத்து பொலிஸார் சாரதிகளிடம் கேட்டுக் கொள்கின்றனர்.



# அலரி மாளிகையில் பிரதமரைச் சந்தித்த புத்தளம் தமிழ் வித்தியாலய மாணவர்கள்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் கல்வி வலயத்திற்குட்பட்ட ஏத்தாளை அரசினர் ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அண்மையில் அலரி மாளிகையைப் பார்வையிடச் சென்றனர்.



பாடசாலை அதிபர் ஏ.எம்.நஜிபுதீன் தலைமையில் சென்ற குழுவினரை பிரதம மந்திரி தினேஷ் குணவர்தன, அன்போடு வரவேற்று ஆசிரியர்கள், மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

அத்துடன், அந்தப் பாடசாலைக்கு நினைவுச் சின்னமாக பிரதமர் தினேஷ் குணவர்தன, மரம் மற்றும் நினைவுப் பலகையும் வழங்கி வைத்தார்.

மேலும், கற்பிட்டிக்கு நிரந்தர பிரதேச செயலாளர் நியமிக்கப்பட்ட வேண்டிய தன் அவசியம் பற்றி அங்கு விஜயம் செய்த பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்.

அத்தோடு, பாடசாலையில் காணப்படும் ஆசிரியர் மற்றும் பௌதீக வளப் பற்றாக்குறை தொடர்பிலும் பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வந்தமையுடன், பாடசாலைக்கு விஜயம் செய்யுமாறும் மாணவர்கள் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தனர் .

இதன்போது, பிரதேச செயலாளர் விடயத்தில் கவனம் செலுத்துவார் எனவும், பாடசாலைக்கு விஜயம் செய்வதற்கு தாம் முயற்சி செய்வார் எனவும் பிரதமர் தினேஷ் குணவர்தன அங்கு சென்ற ஆசிரியர்கள், மாணவர்களிடம் தெரிவித்துள்ளார்.



# நூல்கள் வெளியீடு இன்று!

சு.கணாநிதியின் தாக்கங்கள் சிறுகதைத் தொகுதியும் கருக்குகள் உரைவீச்சு தொகுதியும் வெளிவரவுள்ளன.

இன்று 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கத்தின் தலைமையில் இந்த நிகழ்வு யாழில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வு 37, ஏ. சேர் பொன் இராமநாதன் வீதியில் அமைந்திருக்கும் சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நூல் வெளியீட்டுரையை ஓய்வுநிலை அதிபர் ச.கிருபாகரன் நிகழ்த்த நூல்கள் பற்றிய விமர்சன பார்வைகளை ஏழாலை அகரா ஓய்வு நிலை ஆசிரியர் கோவிந்தராணி கருணானந்தன், எழுத்தாளர் லதா கந்தையா ஆகியோர் முன்வைக்க, ஆசிரியர் சு.சுதர்சன் கருத்துரை வழங்குவார். நூலாசிரியரின் ஏற்புரை நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெறும்.



# இமயமலை பிரகடனத்தை நிராகரித்து பொதுவாக்கெடுப்புக்குக் கோரிக்கை!

## சமூக அமைப்புகளின் பெயரில் அறிவித்தல்

தமிழ் மக்களின் நிலைப்பாடுகளை கருத்தில் கொள்ளாத 'இமயமலை பிரகடனத்தை' தமிழ் சமூக அமைப்புகள், மாணவர்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் மதத்தலைவர்கள் கூட்டாக நிராகரிக்கின்றனர் என்ற தலைப்பில் ஒரு குழுவினர் ஒப்பமிட்டு நேற்று அறிவித்தல் ஒன்றை விடுத்தனர்.

மீண்டும் ஓர் இனவழிப்பும் இரத்தக் களரியும் இந்தத் தீவில் ஏற்படுவதைத் தடுக்க, இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வினை ஏற்படுத்தும் விதமாக தமிழ் மக்களிடையே சர்வ தேசத்தினால் பொது வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் என்று அந்த அறிவித்தலில் கோரப்பட்டிருக்கின்றது.

இந்த அறிக்கையில் கையொப்பம் இட்டவர்களினதும் அதற்கு ஒப்புதல் அளித்தவர்களினதும் விவரம் வருமாறு:-

- தவத்திரு அகத்தியர் அடிகளார் (தென்கயிலை ஆதீனம் – திருகோணமலை)
- வண. பிதா. ஜோசப் மேரி (மட்டக்களப்பு)
- தவத்திரு வேலன் சுவாமிகள் (சிவகுரு ஆதீனம் – யாழ்ப்பாணம் ஒருங்கிணைப்பாளர் – பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்).
- வண. பிதா. ஜெயந்தன் பச்சாசெக் (அமலமேரி தியாகிகள் சபை – யாழ்ப்பாணம்)
- வண. பிதா. கந்தையா ஜெகதாஸ் (மட்டக்களப்பு ஒருங்கிணைப்பாளர் – பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்)
- திருமதி யோ. கனகரஞ்சினி (தலைவர் – வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் – வடக்கு கிழக்கு மாகாணங்கள்)
- அ.விஜயகுமார் (தலைவர் – யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்)
- விக்னேஸ்வரன் கஜரூபன(பிரதிநிதி – கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் – கலை, கலாசார பீடம்)
- சி. தங்கராஜா (தலைவர் – பல்கலைக்கழக ஊழியர் சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- திருமதி. விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் (தலைவர் – பெண்கள் ஒருங்கிணைப்புக் கண்காணிப்பு சங்கம் – வடக்கு கிழக்கு மாகாணங்கள்)
- திருமதி சரோஜா சிவச்சந்திரன் (தலைவர் – பெண்கள் அபிவிருத்தி நிலையம்)
- திருமதி மிதிலைச்செல்வி ஸ்ரீபத்மநாதன் (தலைவர் – உழைக்கும் மகளிர் அமைப்பு)

– ஆகியோரே மேற்படி அறிவித்தலில் ஒப்பமிட்டுள்ளனர். அந்த அறிவித்தலில் கூறப்பட்டவை வருமாறு:-

சிறந்த இலங்கைக்கான சங்கா மற்றும் உலகத் தமிழர் பேரவை ஆகியவற்றின் சமீபத்திய 'இமயமலை பிரகடனம்' பற்றி வடக்கு, கிழக்கை தளமாகக் கொண்ட, கீழ் கையொப்பமிட்ட அமைப்புகளாகிய நாங்கள் கூட்டாக இந்த அறிக்கையை வெளியிடுகின்றோம்.

இமயமலைப் பிரகடனத்தை ("பிரகடனம்") நாம் கவனமாக வாசித்தோம். ஆனால் இந்த பிரகடனம் தமிழ் மக்களின் கருத்துக்களையோ, இலங்கைத் தீவு சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து தமிழ் மக்கள் சிங்கள பேரினவாதத்தினால் அனுபவித்த துன்பங்கள், கொடுமைகளையோ கருத்தில் கொள்ளாமை தொடர்பில் நாம் எமது கடும் அதிருப்தியை வெளியிடுகின்றோம்.

வெளிப்படையாகவே பௌத்த மத குருமார் தமிழ் மக்களின் துன்பங்கள் தொடர்பான தெளிவு அற்றவர்களாகவே உள்ளார்கள். ஏனெனில் அவர்கள் தமிழ் பகுதிகளுக்கு வெளியே சிங்கள வர்களிடையே வாழ்கிறார்கள். மேலும் நாம் அனுபவித்த, அனுபவித்துக் கொண்டிருக்கும் அடக்குமுறைகள் தொடர்பாக அவர்கள் எவ்வித கரிசனைகளையும் கொண்டிருக்கவில்லை.

பதினான்கு வருடங்களுக்கு முன்னர் யுத்தம் முடிவடைந்த பின்னர், 2021ம் ஆண்டு, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சியின் ஊடாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தியுள்ளோம். சிறிலங்கா இராணுவத்தின் மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள் மற்றும் கைதுகளுக்கு மத்தியிலும் ஏறக்குறைய சுமார் ஐந்து இலட்சம் தமிழர்கள் இணைந்து பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை ஐந்து நாள் மக்கள் பேரெழுச்சி மூலம் தமிழ் இனத்தின் நிலைப்பாட்டினை வெளிப்படுத்தி இருந்தனர். தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் போன்ற பாதிக்கப்பட்ட அமைப்பினரும் பல போராட்டங்களையும் பேரணிகளையும் நடத்தி தமிழர்களின் நிலைப்பாட்டினை தொடர்ந்தும் வெளிப்படுத்தி வருகின்றனர். இவை எதுவும் இந்த "பிரகடனத்தில்" கவனத்தில் கொள்ளப்படவில்லை. கடந்த பதினான்கு ஆண்டுகளாக தமிழர்களால் வெளிப்படுத்தப்பட்ட தமிழ் மக்களின் நிலைப்பாட்டினை அனைவரின் கவனத்திற்கும் மீண்டும் கொண்டுவர விரும்புகிறோம்.

1.போருக்கு முந்தைய 1983 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இருந்த அளவிற்கு தமிழர் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தை குறைத்தல். போர் முடிவடைந்து பதினான்கு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. ஆனால் மே 2009 இல் போரின் உச்சக்கட்டத்தில் இருந்ததைப் போலவே மோசமான அளவில் இராணுவ கட்டமைப்பு தமிழர் தாயகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. தமிழ் இனப்படுகொலை மற்றும் தமிழ்ப்

(13ஆம் பக்கம் பார்க்க)



# தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை அடுத்த வருடம் எளிமைப்படுத்தப்படும்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

சிறுவர்கள் மற்றும் பெற்றோர்களின் அழுத்தத்தை குறைக்கும் வகையில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை அடுத்த வருடம் முதல் எளிமைப் படுத்தப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் புலமைப்பரிசில் சித்திகளைப் போன்று 4 ஆம் மற்றும் 5 ஆம் தரங்களில் நடத்தப்படும் பரீட்சைகளில் முப்பது வீதமான பெறுபேறுகளைப் பெற வேண்டும் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் பல முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அவை தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புலமைப்பரிசில் பரீட்சை காரணமாக மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் பாரிய சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என கல்வியாளர்களும் மனநல நிபுணர்களும் நீண்டகாலமாகச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த நிலையில், அடுத்த வருடம் முதல் கல்வியில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# இமயமலை பிரகடனத்தை நிராகரித்து பொதுவாக்கெடுப்புக்குக் கோரிக்கை!

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)


பெண்களைக் கற்பழித்தல் போன்ற பல கொடூரமான குற்றங்களை மேற்கொண்ட சிறிலங்கா ஆயுதப்படை தமிழர் நிலங்களில் தொடர்ந்து நிலைகொண்டிருப்பது, தமிழ் மக்களை தொடர்ந்தும் அச்ச சூழ்நிலையில் வைத்திருப்பதுடன் பல்வேறு சமூக பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றது.

2. ஐ.நா அதிகாரிகளின் முன்மொழிவுகளுக்கு அமைவாக சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ஐஊஊ) பாரப்படுத்தவும். 2009 இல் நடந்த போரின் இறுதி ஆறு மாதங்களில் ஏறக்குறைய எழுபதாயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டமை ஐ.நா. உள்ளக ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கைக் குழந்தைகள், சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். போர் முடிவடைந்து பதினான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் இவ்வினவழிப்பினையும் போர்குற்றங்களையும் நடாத்திய ஒரு பாதுகாப்புப் படை அதிகாரிகளோ அல்லது அரசியல் தலைவர்களோ நீதியை எதிர்கொள்ளவில்லை. மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகர் உட்பட பல ஐ.நா அதிகாரிகள் பரிந்துரைத்தது போல சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) பரிந்துரைக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

3.சிறிலங்கா இராணுவம் உட்பட்ட அரசு நிறுவனங்களின் உதவியுடன் பல வரலாற்று சிறப்பு மிக்க சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டு, சிங்களவர்கள் பூர்வீகமாக வசிக்காத தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு எங்கும் பௌத்த கோயில்கள் கட்டப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

4. தமிழர் தாயகத்தின் இனப் பரம்பலை மாற்றி அமைக்கும் முனைப்புடன் சிங்கள, பௌத்த அரச துணையுடன் தமிழர் தாயகம் எங்கும் இடம்பெறும் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களும் காணி அபகரிப்புகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

5. மீண்டும் ஓர் இனவழிப்பும் இரத்தக்களரியும் இந்தத் தீவில் ஏற்படுவதைத் தடுக்க, இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வினை ஏற்படுத்தும் விதமாக தமிழ் மக்களிடையே சர்வதேசத்தினால் பொது வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும். இலங்கை சுதந்திரம் பெற்றதில் இருந்து நீடித்து வரும் இனப்பிரச்சினைக்கு காரணம் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப் படாமையே ஆகும். இதன் விளைவாக 1958, 1977, 1983 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் தமிழர்கள் பாரியளவில் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ்த் தலைவர்களுக்கும் சிங்கள பெரும்பான்மை அரசுகளுக்கும் இடையிலான பல உடன்படிக்கைகள் தொடர்ந்து வந்த அரசுகளால் கிழித்தெறியப்பட்டன. இந்தியா மற்றும் நோர்வே மேற்கொண்ட சர்வதேச மத்தியஸ்தங்களும் கூட தோல்வியடைந்தன. உலகெங்கிலும் உள்ள பல நாடுகளில், குறிப்பாக பனிப்போர் முடிவடைந்த கடந்த முப்பது ஆண்டுகளாக, ஜனநாயக ரீதியில் அரசியல் தீர்வுகளை காண பொது வாக்கெடுப்பு முறையே நடைமுறையில் உள்ளது. இந்த சர்வதேச நடைமுறையையே தமிழர்களாகிய நாமும் தொடர்ந்து கோரி வருகின்றோம். – என்று உள்ளது.



# 2024 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை முட்டை இறக்குமதிக்கு அனுமதி

எதிர்வரும் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி வரை முட்டை இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அரச வணிகக்கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

சந்தையில் முட்டையின் விலை சடுதியாக உயர்வடைந்ததன் காரணமாக உணவுக் கொள்கைக்கான குழு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய, தொடர்ச்சியாக முட்டையை இறக்குமதி செய்து உள்நாட்டு சந்தைக்கு விநியோகிக்கவுள்ளதாக அரச வணிகக்கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை, சதொச, பேக்கரிகள், ஹோட்டல்களுக்கு ஒரு கோடி முட்டைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச வணிகக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

மேலும் ஒன்றரைக் கோடி முட்டைகள் அடுத்த வாரம் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படவுள்ளன என அவர் குறிப்பிட்டார்.



## மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.6 வீதத்தினால் அதிகரிப்பு!

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டின் மூன்றாம் காலாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.6 வீதத்தால் அதிகரித்துள்ளது.

2022 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 2,900 பில்லியன் ரூபாவாக காணப்பட்டது.

எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 2,946 பில்லியன் ரூபாவாப் பதிவாகியுள்ளதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இலங்கையின் விவசாயத் துறை 3 வீதத்தாலும், கைத்தொழில் உற்பத்தித்துறை 0.3 வீதத்தாலும், சேவைத்துறை 1.3 வீதத்தாலும் வளர்ச்சியடைந்துள்ளன என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





## வறட்சிப் பாதிப்புக்கு நட்டஈடு கிட்டாத விவசாயிகள் முறையீடு செய்ய முடியும்

### விவசாய அமைச்சர் அறிவிப்பு

வறட்சியினால் பாதிக்கப்பட்டு நட்டஈடு கிடைக்கப்பெறாத விவசாயிகள் இருந்தால், மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க முடியும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை பரிசீலித்து, அந்த விவசாயிகளுக்கு நட்டஈட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்டோருக்கான மானியங்களை உரிய முறையில் வழங்குவதே தமது எதிர்பார்ப்பு எனவும் விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கான நிதியை நிதியமைச்சர் என்ற வகையில், ஜனாதிபதி ஒதுக்கீடு செய்துள்ளார் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.




# டெங்கு நோய்க்கு மேலதிகமாக வேறு நோய்களும் பரவுகின்றன

## யாழ் நிலைமை குறித்து நிபுணர்கள் எச்சரிக்கை

தற்போதைய காலப்பகுதியில் டெங்கு நோய்க்கு மேலதிகமாக வேறு நோய்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் பரவுகின்றன என தெரிவித்த பொது வைத்திய நிபுணர் எஸ். சிவன்சுதன், காய்ச்சல் தொடர்ந்து இருந்தால் மருத்துவ ஆலோசனையை பெற்று என்ன வகையான தொற்று என்பதைக் கண்டறிந்து சிகிச்சையை பெற வேண்டும் என்றார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சல் அதிகரித்துள்ள நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பில் இதனை அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

காய்ச்சல் வந்தால் பயப்படாமல் கவனமாக இருந்தால் மரணம் வராது பாதுகாக்கலாம். காய்ச்சல் வந்தால் ஓய்வெடுக்க வேண்டும். நாளாந்த உடற்பயிற்சிகளை தவிர்க்க வேண்டும்.

இந்தக் காலப்பகுதியில் டெங்கு நோய்க்கு மேலதிகமாக வேறு நோய்களும் பரவுகின்றன. உதாரணமாக சுவாசத் தொற்று நோய், உண்ணிக் காய்ச்சல் என்பன பரவுகின்றன. காய்ச்சல் தொடர்ந்து இருந்தால் மருத்துவ ஆலோசனையை பெற்று என்ன வகையான தொற்று என்பதைக் கண்டறிந்து சிகிச்சையை பெறலாம்.

சிறுவர்களை அவதானமாகப் பார்க்க வேண்டும். காய்ச்சல் ஏற்பட்டால் உடலில் நீர்ச்சத்து குறையாத வகையில் அதிகளவில் நீரைப் பருக வேண்டும். வளர்ந்தவர்கள் மணித்தியாலத்துக்கு ஒருமுறை 100 மில்லிலீற்றர் நீர் வரையில் பருக வேண்டும். சிறுநீர் போதுமான அளவு வெளியேறுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.

தொடர்ச்சியாகக் காய்ச்சல் ஏற்பட்டு சிறுநீர் வெளியேறும் அளவு குறைபவர்கள், சத்தி வந்து நீர் அருந்த முடியாதவர்கள் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறவேண்டும். – என்றார்.

# இராணுவ பிரதானியாக மேஜர் ஜெனரல் பீரிஸ்



இலங்கை இராணுவப் படைகளின் பிரதானியாக (இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரியாக) கஜபா படைப் பிரிவின் மேஜர் ஜெனரல் டபிள்யூ.எச்.கே.எஸ். பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முதல் அமுலாகும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டு கடேற் அதிகாரியாக இராணுவ சேவையில் இணைந்து கொண்ட அவர், ரண விக்ரம, ரண சூத்ர, வெளிநாட்டு சேவை பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

1969 ஆம் ஆண்டு ஜூன் 6 ஆம் திகதி பிறந்த டபிள்யூ.எச்.கே.எஸ். பீரிஸ், பாணந்துறை புனித அந்தோனியார் ஆண்கள் பாடசாலை மற்றும் கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார்.



# மூன்று நாடுகளின் தூதுவர்கள் நல்லை ஆதீனத்தில் சந்திப்பு

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த ஜப்பான், சுவிஸ், தென்னாபிரிக்கத் தூதுவர்கள் நேற்று யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்தில் நல்லை குருமுதல்வரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஆதீனமுதல்வர், ஆறு.திருமுருகன், ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் துறை பீடாதிபதி பிரமஸ்ரீ பத்மநாபன் ஆகியோர் சந்திப்பில் பங்குபற்றினர்.







# ‘தேசத்தின் குரல்’ பாலசிங்கத்தின் நினைவேந்தல் கிளிநொச்சியில்!

கிளிநொச்சி மாவட்ட ‘தேசத்தின் குரல்’ அரசறிவியல் பள்ளியின் ஏற்பாட்டில், ‘வணங்குவோம் வல்லமை சேர்ப்போம்’ நினைவுப் பேருரையும், கருத்தாடல் அரங்கும் நேற்றைய தினம் கிளிநொச்சியில் நடைபெற்றது.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளைத் தலைவர் அருணாசலம் சத்தியானந்தம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக் கலைப்பீட பீடாதிபதி கலாநிதி.ரகுராமும், கருத்துரைகளை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் விசுவநாதன் உருத்திரகுமாரன், எழுத்தாளர் குணா.கவியழகன் ஆகியோர் நிகழ்நிலை மூலமும், ஊடகவியலாளர் அ.நிக்சன் நேரடியாகவும் நிகழ்த்தியிருந்தனர்.

இதன்போது “விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்ட மக்களினதும், மாவீரர்களினதும் தியாகத்துக்கு மதிப்பளித்து தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை என்கிற ஈழத் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை உறுதிப்படுத்த எந்தவித விட்டுக்கொடுப்புகளுக்கும், சமரசங்களுக்கும் இடமற்று உறுதியோடு உழைப்போம்’ என்ற மகாநாட்டுத் தீர்மானமும் வெளிப்படுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ்த்தேசிய அரசியல் பிரமுகர்கள், பேராசிரியர்கள், ஊடகவியலாளர்கள், மருத்துவர்கள், அதிபர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ்த்தேசிய ஆர்வலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



























# 20 ஏக்கர் நிலத்தை அபகரித்த கிராம சேவகருக்கு வெறும் இடமாற்றம் மட்டுமே இங்கு தண்டனையாம்

## முல்லைதீவு மாவட்டத்தில் அதிர்ச்சிச் சம்பவம்

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மத்திய வகுப்புத் திட்டத்தில் ஒருவருக்கு வழங்கப்பட்ட 20 ஏக்கர் நிலத்தை அடாத்தகப் பிடித்த கிராம சேவகருக்கு வெறும் இடமாற்றம் மட்டுமே தண்டனையாக வழங்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.


முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் பணியாற்றிய கிராம சேவகர் ஒருவர் தான் பணியாற்றும் அதே பிரதேச செயலாளர் பிரிவில் காணப்பட்ட 60 ஏக்கர் காணியை முறையற்ற வகையில் தனது ஆளுகையில் 20 ஏக்கரையும், தனது இரு சகோதரர்களின் ஆளுகையில் தலா 20 ஏக்கரையும் அபகரித்துள்ளார் என 2021 ஆம் ஆண்டு பொதுமகன் ஒருவரினால் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்குகு முறையிடப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் ஒரு விசாரணைச்சி மேற்கோள்ளுமாறு அமைச்சு மாவட்டச் செயலகத்தை கோரியதன் பெயரில் மாவட்டச் செயலகம் ஒரு குழுவை அமைத்து விசாரணை செய்து அந்த விசாரணையின் அறிக்கைச்சி அமைச்சிற்கும் வடக்கு மாகாணக் காணி ஆணையாளருக்கும் அறிக்கையாக அனுப்பி வைத்துள்ளது.

மாகாணக் காணி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மத்திய வகுப்புத் திட்டத்தில் இராசநாயகம் என்பவருவருக்கு வழங்கிய 20 ஏக்கர் காணியை அப்பகுதியில் வசிக்கும் கிராம சேவகர் ஆளுகை செய்து வருகின்றமையோடு, சட்டத்திற்கு முரணான வகையில் கிராம சேவகரின் பெயரிற்கு ஆவணம் வழங்கியமை விசாரணையின்போது கண்டுகொள்ளப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் மோசடியில் ஈடுபட்ட கிராம சேவர்மீது மேற்கொண்ட விசாரணையின்போது மத்திய வகுப்புத் திட்டத்தில் தனது தந்தைக்கு வழங்கிய காணியினையே தான் ஆட்சி செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதும் வரைபட இலக்கத்தின் பிரகாரம் அது அவரது தந்தைக்கு வழங்கப்படவில்லை எனக் கண்டு கொள்ளப்பட்டுள்ளதாகவும், இந்தக் காணியானது 14850 இலக்க 1969-04-18 ஆம் திகதிய வர்த்தமானியில் வேதர்யா சியான் என்பவரிற்கு காணிக் கச்சேரி மூலம் அளிப்புப் பத்திரம் வழங்க தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அரச இதழான வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டுள்ளது எனவும் மாவட்டச் செயலகம் அறிக்கையிட்டுள்ளது.

இவ்வாறு கிராம சேவகருக்கோ அல்லது கிராம சேவகரின் தந்தைக்கோ வழங்காத - வேறு ஒருவருக்கு வழங்கி உரிமையாளர்கள் கை விட்டிருந்த - நிலத்தினை அபகரித்து, மோசடியாகத் தனது பெயரில் ஆவணத்தைத் தயார்


மாவட்ட செயலகம் - முல்லைத்தீவு
DISTRICT SECRETARIAT - MULLAITIVU
Tel: 0212290032
Date: 2022.05.19

மாகாணக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர்த் திணைக்களம்,
வடமாகாணம்.

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்படும் அரசியல் ரீதியான நடவடிக்கைகள் மற்றும் அதிகாரத்தினை துஸ்பிரயோகம் செய்தல் தொடர்பான முறைப்பாட்டின் விசாரணை அறிக்கை.

மேற்படி விடயம் தொடர்பாக, முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்படும் அரசியல் ரீதியான நடவடிக்கைகள் மற்றும் அதிகாரத்தினை துஸ்பிரயோகம் செய்தல் தொடர்பான முறைப்பாட்டின் விசாரணை செய்து அறிக்கையிடுமாறு தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் HAF/INV/24/2021-02 இலக்க 2021.02.16ம் திகதிய கடிதம் மூலம் மாவட்ட செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் வடகாடு கிராமத்தில் அமைந்துள்ள மத்திய வகுப்புத் திட்டக் காணிகளை கிராம அலுவலர் [illegible] மற்றும் அவர்களின் சகோதரரான [illegible] ஆகிய மூவரும் ஆவணங்கள் இன்றி அல்லது சட்டவிரோதமான ஆவணங்களுடன் அண்ணளவாக 60 ஏக்கர் மேற்பட்ட மத்திய வகுப்புத்திட்டக் காணிகளை தொடர்ந்தும் அபிவிருத்தி செய்து வருகின்றனர்.

- நில அளவை திணைக்களத்தின் வரைபடத்தில் Topo pp – 52 Inset 30 Lot 511 வடக்குப் புறமாக உள்ள காணியாக குறிப்பிடப்பட்ட 20 ஏக்கர் காணி கிராம அலுவலரான [illegible] என்பவருக்கு இராசநாயகம் என்பரின் பெயரில் இருந்த காணி அனுமதிப்பத்திரம் சட்டத்திற்கு முரணான வகையில் உரிமை மாற்றம் செய்து 2004 ம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அலுவலகப் பிரதி இல்லாத நிலையில் [illegible] என்பவரால் சட்டத்திற்கு முரணான வகையில் தயார் செய்யப்பட்ட காணி ஆவணத்தினை பிரதேச செயலகத்தில் சமர்ப்பித்து அதனை அலுவலகப் பிரதியாக மாற்ற நடவடிக்கை எடுத்தமை.
- மேலும் நில அளவை வரைபடத்தின் Topo pp – 52 Inset 30 Lot 512 ஆக குறிப்பிடப்பட்ட மத்திய வகுப்புத்திட்டத்தில் 20ஏக்கர் அளவிலான காணி கிராம அலுவலரின் சகோதரரான [illegible] பாடசாலை அதிபர் அவர்களினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இக் காணியானது இராசநாயகம் என்பவரது அளிப்பு பத்திரத்தில் இருந்து [illegible] என்பவருக்கு அரசாங்க அதிபரின் [illegible]

126.07.2021\WE COM.docx
I.Govt.Agent 0212290036 | Chief Accountant Tel: 0212290034 | Director Planning Tel: 0212290043 | Chief Internal Auditor Tel: 0212290176 | Asst.Govt.Agent Tel: 0212290336

செய்த கிராம சேவகர், பிரதேச செயலகத்தின் ஆவணப் பிரதிக்காக தன்னால் மோசடியாகத் தயார் செய்யப்பட்ட ஆவணத்தின் ஒரு பிரதியை கோவையிட்டு, தனது மோசடியான ஆவணத்தை அலுவலகப் பிரதியாக மாற்றுவதற்கும் முயன்றார் எனவும் மாவட்டச் செயலகம் தற்போது கண்டறிந்துள்ளது.

கிராமசேவகர் மோசடியாக அபகரித்த மத்திய வகுப்புத் திட்டத்தின் கீழான 20 ஏக்கருக்கும் அப்பால் மேலும் ஒரு 20 ஏக்கர் காணியில் தன்னால் நடாத்தப்படுகின்ற கால்நடைக்கான பட்டியினையும் அமைத்துள்ளார் எனவும் மாவட்டச் செயலகம் 2022 ஆண்டு நடாத்திய விசாரணையில் கண்டறியப்பட்டதன் அடிப்படையில் மோசடி நிரூபணமாகின்றது.

இவ்வாறு ஓர் கிராம சேவகர் 20 முதல் 60 ஏக்கர் வரையில் மேற்கொண்ட மோசடிக்கு மாவட்டச் செயலகம் மேற்கொண்ட நடவடிக்கை என்ன என மாவட்டச் செயலகத்திடம் விண்ணப்பித்த தகவல் அறியும் சட்டத்தின் கீழான விண்ணப்பத்திற்கு மாவட்டச் செயலகம் நடத்திய விசாரணையின் காண்புகள் அறிக்கையாக மாகாணக் காணி ஆணையாளருக்கு 2022-05-19ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டபோதும், அதற்கு மாகாண காணித் திணைக்களம் இன்று வரையில் பதிலளிக்கவில்லை என 2023-12-14 ஆம் திகதிய கடிதம் மூலம் முல்லைத் தீவு மாவட்டச் செயலாளர் எழுத்தில் பதிலளித்துள்ளார்.

மோசடியை மேற்கொண்டார் என்ச்க் கண்டறியப்பட்ட கிராம சேவகருக்கு எதிராக விசாரணைக்கு அப்பால் மாவட்டச் செயலகம் மேற்கொண்ட நடவடிக்கையாக தாபனவிதிக் கோவை தொகுதி 11 அத்தியாயம் XLVIIIற்கு அமைய எச்சரிக்கை கடிதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் மாவட்டச் செயலாளர் எழுத்தில் பதிலளித்துள்ளார்.

கிராமத்திற்கு வழி காட்டியான கிராம சேவகரே இவ்வாறு பெரும் அளவான காணியை மோசடியாக அபகரித்தமைக்கு எதிராக வெறுமனே இடமாற்றம் மட்டும்தான் தண்டணையா என்ற கேள்வியும் எழுகின்றது.

கிராமசேவகரின் துணையோடு மேலும் 20 ஏக்கரை அபகரித்துள்ள கிராமசேவகரின் சகோதரரும் ஓர் பாடசாலையின் அதிபர் எனவும் மாவட்டச் செயலக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலகம் மேற்கொண்ட விசாரணை அறிக்கையினை 2022-05-19 இல் தங்களிற்கு அனுப்பியும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை என முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் பதிலளித்திருப்பது தொடர்பில் வடக்கு மாகாண காணி ஆணையாளரான சோதிநாதனை தொடர்புகொண்டு கேட்டபோது, இது தொடர்பில் எம்மால் முழுமையாக ஆராயப்படுகின்றது, இறுதி முடிவு அல்லது தீர்மானத்திற்காக விடயம் தயார் செய்யப்படுகின்றது என அவர் பதிலளித்தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.12.2023

## மேஷம்

ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதல் அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு மிகுந்த திருப்தி அளிக்கும்.

நீங்கள் பணியிடத்தில் சிறப்பாக பணியாற்றுவீர்கள். பணியில் உங்கள் முயற்சிக்கு பாராட்டும் அங்கீகாரமும் கிடைக்கும்.

குடும்ப சுப நிகழ்ச்சி குறித்து உங்கள் துணையுடன் திட்டமிடுவீர்கள். இதனால் மகிழ்ச்சியும் திருப்தியும் ஏற்படும்.

இன்று நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். நீங்கள் பணம் சேமிக்கும் நிலையில் இருப்பீர்கள்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

## ரிஷபம்

இன்று உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு நிறைந்து காணப்படும். பிரார்த்தனையில் ஈடுபடுவது நன்மை அளிக்கும். உங்கள் மனம் தெளிவாக இருக்கும். அதன் மூலம் வெற்றி கிடைக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திட்டமிட்டு பணியாற்றுவதன் மூலம் வெற்றி காணலாம். என்றாலும் பலன்கள் முழு அளவில் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

உங்கள் துணையுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். தகவல் தொடர்பு திறமையை வளர்த்துக் கொள்வதும் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதும் வேறுபாட்டை நீக்க உதவும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சி கரமாக இருக்காது. தேவையற்ற பொறுப்புகள் காரணமாக இன்று செலவுகள் அதிகமாக இருக்கும்.

## மிதுனம்

மனதில் காணப்படும் வருத்தம் காரணமாக குழப்பங்கள் இருக்கும். பிரார்த்தனை உங்களுக்கு நன்மை அளிக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திட்டமிட்டு பணியாற்றினால் நல்ல பலன் காணலாம்.

குடும்ப பிரச்சனை ஒன்றில் உங்கள் துணையுடன் சண்டை ஏற்படும். இது உறவின் ஸ்திரத்தன்மையைப் பாதிக்கும். கருத்து வேறுபாடு ஏற்படும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் தினசரி தேவைகளை உங்களால் பூர்த்தி செய்து கொள்ள இயலாது.

பல் தொற்று ஏற்படுத்தும் உணவு வகைகளை தவிர்க்கவும். தலைச்சுற்றல் ஏற்பட வாய்ப்புள்ளது.

## கடகம்

இன்று உங்களிடம் நேர்மறை எண்ணம் காணப்படும். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் மனதை சமநிலைப் படுத்த வேண்டும்.

உறுதியுடன் செயற்பட்டால் எளிமையாக பணியாற்றலாம். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பாக இருப்பீர்கள். இதனால் இருவரிடையே உறவில் அன்பு மலரும். உங்கள் துணையிடம் திடமான நம்பிக்கை ஏற்படும்.

இன்று நிதி நிலை மகிழ்ச்சிகரமாக இருக்கும். சேமிப்பதற்கான வாய்ப்பும் அதிகம். முதலீடுகளில் பங்கு கொள்வதன் மூலம் இன்று பண வரவு காணலாம்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினயும் இருக்காது. தெளிவான மனதும் உறுதியும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும்.

## சிம்மம்

உங்கள் செயல்களை சுமூகமாக நடத்துவதில் நீங்கள் வெற்றி காண்பீர்கள். உங்கள் ஆர்வத்தை மேம்படுத்தும் முக்கிய முடிவுகளை நீங்கள் எடுப்பீர்கள்.

உங்கள் பணிகளை நீங்கள் எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும். கடினமான பணிகளைக் கூட நீங்கள் எளிதாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் தரமான நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். அன்பு பரிமாற்றக் கொள்கை உதவிகரமாக இருக்கும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.உங்களின் கடின உழைப்பு காரணமாக ஊக்கத் தொகை வகையில் இன்று கூடுதல் பண வரவு காணப்படும்.

## கன்னி

பதட்டம் காரணமாக எதிர்மறை எண்ணங்கள் காணப்படும். இசையைக் கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

அதிக பணிகள் காரணமாக நேரம் அதிகம் செலவாகும். உங்கள் பணிகளை முடிக்க இயலாமல் இருக்கும். இன்று திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் எதிர்மறையான எண்ணங்கள் காணப்படும். உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வது சிறந்தது. உணர்வுப் பூர்வமான பிரச்சினைகள் வர்த்தத்தை அளிக்கும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

தலை வலி போன்ற சிறிய ஆரோக்கியப் பிரச்சினைகள் எழலாம்.

## துலாம்

இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது.வழக்கமான பணிகளை ஆற்றுவதிலும் கடினமான நிலை இருக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் நீங்கள் பணிகளை பொறுமையாகக் கையாள வேண்டும். சக பணியாளர்களுடன் அமைதியாக இருக்கவும்.

உணர்வுப் பூர்வமான பிரச்சினைகள் உறவை பாதிக்கும். உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிக்க நீங்கள் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று நிதிநிலை கடினமாக காணப்படும். தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள நேரும். அதிகரிக்கும் பொறுப்புகளை நிர்வகிப்பது கடினமாக இருக்கும்.

## விருச்சிகம்

இன்று உங்களுக்கு மிகவும் வெற்றி கரமான நாள். நீங்கள் மகிழ்ச்சியுடனும் உறுதியுடனும் உங்கள் செயல்களை மேற்கொள்வீர்கள். முக்கிய முடிவுகள் இன்று நன்மை அளிக்கும்.

உங்கள் பணிக்கு சிறந்த பாராட்டு பெறுவீர்கள். உங்களுக்குள் இருக்கும் திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் பாராட்டு உற்சாகம் அளிக்கும்.

நீங்கள் மகிழ்ச்சி தரும் நம்பிக்கையான உணர்வுகளையும் உங்கள் துணையுடன் பக்குவமான புரிந்துணர்வையும் உணர்வீர்கள். மனதில் ஆழ்ந்த அமைதி நிலவும்.

இன்று அதிக பணம் காணப்படும். வங்கியில் பணத்தை சிறப்பாக பராமரிப்பீர்கள்.

இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.12.2023

## தனுசு

இன்று கட்டுப்பாட்டை மீறும் சூழல் காணப்படும். என்றாலும் நீங்கள் அதிலி ருந்து நன்மை பெற முயற்சிப்பீர்கள். உறுதியும் திட்டமிடலும் உங்களுக்கு வழி காட்டும்.

உங்கள் பணிகளை எளிதாக முடிக்க இயலாது. உங்கள் பாதி வேலைகள் முடிக்க முடியாது நிலுவையில் இருக்கும். இலக்குகளை அடைய நீங்கள் சிறிது கடினமாக உழைக்க வேண்டும்.

தேவையற்ற மனக் குழப்பங்கள் உங்களை பாதிக் கும். இதனால் மகிழ்ச்சியான உறவை அனுபவிக்க இயலாது.

அஜாக்கிரதை காரணமாக நீங்கள் பணம் இழக்க நேரலாம். தவறான முடிவுகள் மற்றும் முதலீடுகளால் நஷ்டம் ஏற்படும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## கும்பம்

இன்று உங்களுக்கு பதட்டமான நாளாக இருக்கும். இசை கேட்டல் திரைப்படங்கள் பார்த்தல் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். நீங்கள் பிறரால் தவிர்க்கப்படுவது போல உணர்வீர்கள்.

மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது. இது உங்களுக்கு சற்று ஏமாற்றம் அளிக்கும். நீங்கள் கடின மாக உழைத்தாலும் மகிழ்ச்சி காணப்படாது.

மனக் குழப்பங்கள் காரணமாக உங்கள் துணையிடம் உறவு பாதிக்கும் வகையில் நடந்து கொள்வீர்கள். புரிந் துணர்வு குறைந்து காணப்படும். உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும்.

திடீர் பண நஷ்டத்திற்கான வாய்ப்பு உள்ளது. அதனை சமாளிக்க இயலாத காரணத்தினால் நீங்கள் சற்று எமற்ற மடைவீர்கள். பணத்தை கவனமாகக் கையாளவும்.

## மகரம்

இது உங்களுக்கு சாதகமான நாளாக அமையாது. தேவையற்ற மனக் குழப்பங்கள் உங்களை முன்னேற விடாமல் தடுக்கும். இன்று உங்கள் செயல்களில் மந்த நிலை காணப்படும்.

இன்று நீங்கள் திறமையாக பணி யாற்ற இயலாது. இன்று உங்கள் பொறுப்புகளை முடிக்க வேண்டிய நிலைமை காணப்படும்.

உங்கள் துணையுடன் இனிமையான உறவு காணப்படாது. தேவையற்ற காரணங்களுக்காக வாக்குவாதங்கள் ஏற்படலாம்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். இன்று வரவு செலவு இரண்டும் காணப்படும். பணத்தை பரா மரிக்கும் கட்டுப்பாட்டை இழப்பீர்கள்.

கால் மற்றும் தொடை வலி இன்று காணப்படும். ஆற்றல் மற்றும் ஆரோக்கியக் குறைவு காரணமாக சோர்வு காணப்படும்.

## மீனம்

இந்த நாள் உங்களுக்கு உற்சாக மான நாளாக இருக்கும். நீங்கள் உறுதி யுடன் செயல்படுவீர்கள். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியில் வளர்ச்சி காணப்படும். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்வீர் கள். நீங்கள் திறமையான செயல்முறையைப் பராம ரிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இணக்கமான உறவு காணப்படும். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும். நேர்மையான அணுகுமுறை உதவிகரமாக இருக்கும்.

உங்களிடம்இருக்கும் பணம் உங்களுக்கு திருப்தி அளிக்கும். சேமிப்பதற்கும் முதலீடு செய்வதற்கும் வாய்ப்பு உள்ளது. அது உங்களுக்கு உதவியாக இருக்கும்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள். உங் களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# புத்தளத்தில் தொடர்ந்து கொட்டும் மழை இதுவரையில் 4,340 பேருக்குப் பாதிப்பு!



(ரஸீன் ரஸ்மின்)

தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழையினால் வான் கதவுகள் திறக்கப்பட்டமை மற்றும் வெள்ளம் காரணமாக புத்தளம் மாவட்டத்தில் இதுவரை 31 கிராம சேவகர் பிரிவுகளில் 1,229 குடும்பங்களைச் சேர்ந்த 4,340 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் புத்தளம் மாவட்ட செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் வெள்ளம் காரணமாக இது வரை 6 வீடுகள் சேதமடைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, முந்தல் பிரதேச செயலாளர் பிரிவில் 11 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 741 குடும்பங்களைச் சேர்ந்த 2566 பேரும், கற்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவில் 4 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 210 குடும்பங்களைச் சேர்ந்த 871 பேரும், வனாத்தவில்லு பிரதேச செயலாளர் பிரிவில் 3 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 100 குடும்பங்களைச் சேர்ந்த 291 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் தெரிவித்தார்.

மேலும், நவகத்தேகம பிரதேச செயலாளர் பிரிவில் 4 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 18 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேரும், கருவலகஸ்வெவ பிரதேச செயலாளர் பிரிவில் 7 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 52 குடும்பங்களைச் சேர்ந்த 178 பேரும், புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவில் 2 கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 108 குடும்பங்களைச் சேர்ந்த 378 பேரும் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கினிமிட்டிய, ராஜாங்கனை மற்றும் தப்போவ ஆகிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டமையாலும், கடந்த இரண்டு நாள்களாகத் தொடர்ச்சியாக பெய்த கடும் மழை காரணமாகவும் மாவட்டத்திலுள்ள கால்வாய்கள் உள்ளிட்ட நீர் நிலைகள் நிரம்பி வழிவதாலும் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளின் மேற்பார்வையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையுடன், புத்தளம் மாவட்டத்தில் வெள்ள அனர்த்த நிலைமை படிப்படியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுவதாகவும் புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் தெரிவித்தார்.

முந்தல், புத்தளம் மற்றும் கற்பிட்டி, வென்னப்புவ ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு சமைத்த உணவுகளும், வெள்ளம் காரணமாக தமது வீட்டிலிருந்து வெளியேறி உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களும் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த இரண்டு நாள்களாகத் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக, மூன்று நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் உயர்வடைந்தமையால் வான் கதவுகள திறக்கப்பட்டுள்ளன எனப் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமை நேர அதிகாரி தெரிவித்தார்.

இதன் அடிப்படையில், தப்போவ நீர்த்தேக்கத்தில் 18 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையுடன் 6 கதவுகள் 5 அடி உயரத்திலும், 12 வான் கதவுகள் தலா 2 அடி உயரத்திலும் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் இந்த நீர்த்தேக்கத்திலிருந்து வினாடிக்கு 6,230 கன அடி நீர் வெளியேற்றப்படுகின்றது.

அத்துடன், இங்கினிமிட்டிய நீர்த்தேக்கத்தில் 6 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. அதில் 1 அடி உயரத்தில் 4 வான் கதவுகளும், 2 அடி உயரத்தில் 2 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. இந்த நீர்த்தேக்கத்திலிருந்து வினாடிக்கு 4,000 கன அடி நீர் வெளியேற்றப்படுகின்றது.

மேலும் ராஜாங்களை நீர்த்தேக்கத்தில் 12 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன எனவும் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமை நேர அதிகாரி தெரிவித்தார்.

இவ்வாறு நீர்த்தேக்கங்களில் இருந்து நீர் வெளியேற்றப்படுவதால் மேற்படி மூன்று நீர்த்தேக்கங்களை அண்டிய பகுதிகளில் வாழும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனப் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமை நேர அதிகாரி மேலும் கூறினார்.



